©
தமிழ்நாடு அரசு
2014

கையெழுத்துத் தொடர்

# நிதி (படிகள்)த் துறை

**அரசு ஆணை எண்.105, நாள் 28.04.2014.**

*(ஜய, சித்திரை –15 , திருவள்ளுவர் ஆண்டு 2045)*

**படிகள்** – பழைய ஊதிய விகிதத்தில் அகவிலைப்படி – **01.01.2014** முதற்கொண்டு உயர்த்தப்பட்ட அகவிலைப்படி வீதம் – ஆணைகள் – வெளியிடப்படுகின்றன.

**பின்வருவனவற்றைப் படிக்கவும்:–**

1. அரசாணை நிலை எண்.405, நிதி (படிகள்) துறை, நாள் 11.10.2013.
2. மத்திய அரசு, புதுடில்லி, நிதியமைச்சகம், செலவுத் துறையின் 22.4.2014 ஆம் நாளிட்ட 1–(3) /2008–E.II (B) ஆம் எண்ணுள்ள அலுவலகக் குறிப்பு.

*****

**<u>ஆணை:</u>**

மேலே பார்வை **1–இல்** படிக்கப்பட்டுள்ள அரசு ஆணையில் கீழே விவரித்துள்ளபடி, மாநில அரசு அலுவலர்களுக்கு பழைய ஊதிய விகிதத்தில் திருத்தப்பட்ட அகவிலைப்படி வீதத்தை அனுமதித்து ஆணைகள் பிறப்பிக்கப்பட்டன:–

| எந்நாளிலிருந்து வழங்கத்தக்கது என்பது | பழைய ஊதிய விகிதத்தில் அகவிலைப்படி வீதம் (மாதம் ஒன்றுக்கு) |
|---|---|
| **01.072013** | **அடிப்படைச் சம்பளம் மற்றும் அகவிலை ஊதியத்தில் 183 சதவீதம்** |

2. மேலே பார்வை 2–இல், படிக்கப்பட்டுள்ள மைய அரசு அலுவலக குறிப்பில், பழைய ஊதிய விகிதத்திலேயே தொடர்ந்து ஊதியம் பெறும் அலுவலர்களுக்கு **01.01.2014** முதல் அகவிலைப்படியை 183 சதவீதத்திலிருந்து 200 சதவீதமாக உயர்த்தி அனுமதித்துள்ளது.

3. மேலே படிக்கப்பட்டுள்ள மைய அரசின் ஆணையைப் பின்பற்றி, 01.01.2006 தேதிக்கு முன்னர் இருந்த **பழைய ஊதிய விகிதத்திலேயே தொடர்ந்து ஊதியம் மற்றும் படிகள்** பெற்று வரும் மாநில அரசு அலுவலர்களுக்கு தற்போது கீழே குறிப்பிட்டுள்ளபடி, திருத்தப்பட்ட வீதத்தில் அகவிலைப்படி அனுமதித்து ஆணை வெளியிடப்படுகிறது.

| எந்நாளிலிருந்து வழங்கத்தக்கது என்பது | பழைய ஊதிய விகிதத்தில் அகவிலைப்படி வீதம் (மாதம் ஒன்றுக்கு) |
|---|---|
| **01.01.2014** | **அடிப்படைச் சம்பளம் மற்றும் அகவிலை <u>ஊதியத்தில் 200 சதவீதம்</u>** |

/த.பி.பா/

4. இவ்வாறு உயர்த்தப்பட்ட வீதத்திலான அகவிலைப்படியை **01.01.2014** முதற்கொண்டு ரொக்கமாக வழங்கப்படும்.

5. திருத்தப்பட்ட அகவிலைப்படியைக் கணக்கிடுகையில் ஒரு ரூபாய்க்குக் குறைவாக வரக்கூடிய தொகை, அது 50 காசும் அதற்கு மேலும் இருக்குமாயின் அது அடுத்த ஒரு ரூபாயாக கணக்கிடப்பட வேண்டும். அதுவே, 50 காசுக்குக் குறைவாக இருந்தால் அது விட்டுவிடப்பட வேண்டும்.

6. மேலே அனுமதிக்கப்பட்ட திருத்தப்பட்ட அகவிலைப்படி தற்போது அகவிலைப்படி பெறும் முழு நேர அலுவலர்களுக்கும், சில்லரைச் செலவு நிதியிலிருந்து நிர்ணயிக்கப்பட்ட மாதாந்திர ஊதியம் பெறும் முழு நேர அலுவலர்களுக்கும் அனுமதிக்கத்தக்கதாகும். இந்த ஆணையில் அனுமதிக்கப்பட்ட திருத்தப்பட்ட அகவிலைப்படி, பகுதி நேர அலுவலர்களுக்கு அனுமதிக்கத்தக்கதல்ல.

7. இந்த ஆணையில் அனுமதிக்கப்பட்ட திருத்தப்பட்ட அகவிலைப்படி, அரசு மானியம் பெறும் கல்வி நிறுவனங்களில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கும், ஆசிரியர் அல்லாத பிற அலுவலர்களுக்கும், உள்ளாட்சி மன்றங்களின் அலுவலர்களுக்கும், பல்கலைக்கழக மானியக்குழு /அனைத்திந்திய தொழில் நுட்பக் கல்விக்குழு சம்பள வீதங்களின் கீழ்வரும் அலுவலர்களுக்கும், அரசு மற்றும் மானியம் பெறும் பல்தொழில் நுட்பப் பயிற்சிப் பள்ளிகள், சிறப்பு பட்டயப் படிப்பு நிறுவனங்களில் பணியாற்றும் ஆசிரியர்கள்/உடற்பயிற்சி இயக்குநர்கள்/நூலகர்கள் ஆகியோருக்கும், வருவாய்த் துறையிலுள்ள கிராம உதவியாளர்களுக்கும், சத்துணவு திட்ட அமைப்பாளர்கள், குழந்தைகள் நல அமைப்பாளர்கள், அங்கன்வாடி பணியாளர்கள், சத்துணவு சமையலர்கள், சமையல் உதவியாளர்கள் மற்றும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில் பணிபுரியும் பஞ்சாயத்து உதவியாளர்கள்/ எழுத்தர்கள் ஆகியோருக்கும் பொருந்தும்.

8. இச்செலவு, சம்பந்தப்பட்ட கணக்குத் தலைப்பின் பெருந்தலைப்பு, துணைப் பெருந்தலைப்பு, சிறு தலைப்பின் கீழ்வரும் ‘‘03. அகவிலைப்படி’’ என்ற நுணுக்கத் தலைப்பில் பற்று எழுதப்பட வேண்டும்.

9. இதற்கான பட்டிகள் அனுப்பப்படும் போது, முதன்மை மாநிலக் கணக்குத் துறைத் தலைவர் (கணக்குகள் மற்றும் உரிமைத் தொகை), சென்னை–18, அவர்களிடமிருந்து அனுமதிக்காகக் காத்திராமல், திருத்தப்பட்ட அகவிலைப்படியை வழங்குமாறு கருவூல அலுவலர்கள் / சம்பளக் கணக்குகள் அலுவலர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**த. உதயசந்திரன்**
அரசு செயலாளர் (செலவினம்)

**பெறுநர்**

அனைத்து அரசுச் செயலாளர்கள்.
செயலாளர், சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை–9.

காப்பாளர், ஆளுநர் மாளிகை, ராஜ்பவன், சென்னை—32.
ஆளுநரின் செயலாளர், ராஜ்பவன், சென்னை—32.
ஆளுநர் செயலகம், ராஜ்பவன், சென்னை—32.
அனைத்துச் செயலகத் துறைகள் (அலுவலக நடைமுறை மற்றும் பட்டியல் பிரிவுகள்).
நிதித்துறையிலுள்ள பிரிவுகள் அனைத்தும்.
அனைத்து துறைத் தலைவர்கள்.
மாநில தகவல் ஆணையம், 2, தியாகராய சாலை, எல்டாம்ஸ் ரோடு சந்திப்பு, சென்னை—18.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்.
அனைத்து மாவட்ட நீதிபதிகள் / அனைத்து முதன்மை நீதித்துறை மாஜிஸ்டிரேட்கள்.
முதன்மை மாநில கணக்குத் துறைத் தலைவர் (கணக்குகள் மற்றும் உரிமைத் தொகை), சென்னை—18.
முதன்மை மாநில கணக்குத் துறைத் தலைவர் (கணக்குகள் மற்றும் உரிமைத் தொகை), சென்னை—18 (பெயரில்).
மாநில கணக்குத் துறைத் தலைவர் (தணிக்கை—I), சென்னை—18.
மாநில கணக்குத் துறைத் தலைவர் (தணிக்கை—I), சென்னை—18 (பெயரில்).
மாநில கணக்குத் துறைத் தலைவர் (தணிக்கை—II), சென்னை—18.
மாநில கணக்குத் துறைத் தலைவர் (தணிக்கை—II), சென்னை—18 (பெயரில்).
மாநில கணக்குத் துறைத் தலைவர் (உதபி), சென்னை—9 / மதுரை.
இயக்குநர், கருவூலக் கணக்குகள் துறை, சென்னை—15.
சம்பளக் கணக்குகள் அலுவலர் (கிழக்கு), சென்னை—5.
சம்பளக் கணக்குகள் அலுவலர் (தலைமைச் செயலகம்), சென்னை—9.
சம்பளக் கணக்குகள் அலுவலர் (தெற்கு), சென்னை—35.
சம்பளக் கணக்குகள் அலுவலர் (வடக்கு), சென்னை—79.
சம்பளக் கணக்குகள் அலுவலர், மதுரை 625 001.
அனைத்து கருவூல அலுவலகங்கள்.
அனைத்துத் துணைக் கருவூல அலுவலகங்கள்.
தலைவர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை—3.
ஒழுங்கு நடவடிக்கைகள் நடுவர் மன்ற ஆணையாளர், எண்.6, மாணிக்கேஸ்வரி சாலை, சென்னை—10.
பதிவாளர், உயர்நீதி மன்றம், சென்னை—104.
அனைத்து பல்கலைக்கழகங்கள் மற்றும் கோயம்புத்தூர் வேளாண்மைப் பல்கலைக்கழகம் ஆகியவற்றின் பதிவாளர்கள்.
அரசுக்கு சொந்தமான அனைத்து நிறுவனங்கள் / சட்டப்படியான வாரியங்கள்.
ஆணையாளர், மாநகராட்சி, சென்னை / மதுரை / கோயம்புத்தூர் / திருச்சிராப்பள்ளி / சேலம் / திருநெல்வேலி / ஈரோடு / திருப்பூர்.
அனைத்து கோட்ட வளர்ச்சி அலுவலர்கள்.
அனைத்து வட்டார வளர்ச்சி அலுவலர்கள்.
அனைத்து நகராட்சி ஆணையாளர்கள்.
அனைத்து கோட்டாட்சியர்கள்.
அனைத்து வட்டாட்சியர்கள்.
அனைத்து முதன்மை கல்வி அலுவலர்கள்.
திட்ட ஒருங்கிணைப்பாளர், தமிழ்நாடு ஒருங்கிணைந்த சத்துணவுத் திட்டம், எண்.570, அண்ணா சாலை, சென்னை—18.
அனைத்து அங்கீகரிக்கப்பட்ட பணிச்சங்கங்கள்.

<u>நகல்</u>

அரசு தலைமைச் செயலாளரின் நேர்முக செயலாளர், சென்னை—9.
அரசு முதன்மைச் செயலாளரின் நேர்முக செயலாளர், நிதித்துறை, சென்னை—9.

/த.பி.பா/

முதலமைச்சர் அவர்களின் செயலாளர், சென்னை–9.
மத்திய அரசுச் செயலாளர், உள்துறை அமைச்சகம், புதுடில்லி.
மத்திய அரசுச் செயலாளர், நிதி அமைச்சகம் (பொருளாதார விவகாரங்கள் துறை), புதுடில்லி.
மத்திய அரசுச் செயலாளர், நிதி அமைச்சகம் (செலவுத்துறை), புதுடில்லி.
மத்திய அரசுச் செயலாளர், நிதி அமைச்சகம் (வங்கிகள் வருவாய்த்துறை) புதுடில்லி.
மத்திய அரசுச் செயலாளர்,வெளிவிவகாரஅமைச்சகம், புதுடில்லி.
முதுநிலைஆராய்ச்சிஅலுவலர், சம்பளஆராய்ச்சிப்பிரிவு,
நிதி அமைச்சகம் (செலவுத்துறை),அறை எண் 261, வடக்கு பிளாக், புதுடில்லி.
இருப்புக்கோப்பு/உதிரி நகல்கள்.

**// ஆணைப்படி : அனுப்பப்படுகிறது //**

**பிரிவு அலுவலர்**